# கார் நாற்பது

##1
பொரு-கடல்-வண்ணன் மார்பு-இல் தார் போல்
திரு-வில் விலங்கு ஊன்றி தீம்-பெயல் தாழ
வருதும் என மொழிந்தார் வாரார்-கொல் வானம்
கரு இருந்து ஆலிக்கும்-போழ்து

##2
கடுங்-கதிர் நல்கூர கார் செல்வம் எய்த
நெடுங்-காடு நேர்-சினை ஈன கொடுங்குழாய்
இன்னே-வருவர்-நமர் என்று எழில்-வானம்
மின்னும் அவர் தூது உரைத்து

##3
வரி-நிற-ப்-பாதிரி வாட வளி போழ்ந்து
அயிர்-மணல் தண்-புறவு-இன் ஆலி புரள
உரும் இடி வானம் இழிய எழும்-ஏ
நெருநல் ஒருத்தி-திறத்து

##4
ஆடு-மகளிர்-இன் மஞ்ஞை அணி கொள
காடு-உம் கடுக்கை கவின் பெற ப் பூத்தன
பாடு வண்டு ஊதும் பருவம் பணைத்தோளி
வாடும் பசலை மருந்து

##5
இகழுநர் சொல் அஞ்சி ச் சென்றார் வருதல்
பகழி-போல்-உண்கண்ணாய் பொய்-அன்மை ஈண்டை ப்
பவழம்-சிதறியவை-போல க் கோபம்
தவழும் தகைய புறவு

##6
தொடி-இட ஆற்று-தொலைந்த-தோள் நோக்கி
வடு இடை ப் போழ்ந்து அகன்ற கண்ணாய் வருந்தல்
கடிது இடி வானம் உரறும் நெடு-இடை ச்
சென்றார்-ஐ நீடன்மின் என்று

##7
நச்சியார்-க்கு ஈதல்-உம் நண்ணார் த் தெறுதல்-உம்
தற்செய்வான் சென்றார் த் தரூஉம் தளரியலாய்
பொச்சாப்பு-இலாத புகழ்-வேள்வி-த்-தீ ப் போல
எ-ச்-சார்-உம் மின்னும் மழை

##8
மண்-இயல்-ஞாலத்து மன்னும் புகழ் வேண்டி
பெண்-இயல்-நல்லாய் பிரிந்தார் வரல்-கூறும்
கண் இயல் அஞ்சனம்-தோய்ந்த-போல் காயா-உம்
நுண்-அரும்பு ஊழ்த்த புறவு

##9
கருவிளை கண்-மலர்-போல்-பூத்தன கார்-க்கு-ஏற்று
எரி வனப்பு உற்றன தோன்றி வரி-வளை
முன்கை இறப்ப த் துறந்தார் வரல்-கூறும்
இன்சொல்-பல-வ்-உம் உரைத்து

##10
வான்-ஏறு வானத்து உரற வய-முரண்
ஆன்-ஏற்று-ஒருத்தல் அதன்-ஓடு எதிர் செறுப்ப
கான்-யாற்று-ஒலி-இன் கடு-மான் தேர் என்-தோழி
மேனி தளிர்ப்ப வரும்


-------------------------------------
keyed-in and segmentd by v.s.r

##11
புனர்–தரு செல்வம் தருபாக்கு ச் சென்றார்
வணர்–ஒலி–ஐம்பாலாய் வல்–வருதல் கூறும்
அணர்த்து எழு பாம்பு–இன் தலை போல் புணர் கோடல்
பூங்–குலை ஈன்ற புறவு

##12
மை–எழில்–உண்கண் மயில்–அன்ன–சாயலாய்
ஐயம்–தீர்–காட்சி அவர் வருதல் திண்ணிது–ஆம்
நெய்–அணி–குஞ்சரம் போல இருங்–கொண்மூ
வைகலும் ஏரும் வலம்

##13
ஏந்து–எழில்–அல்குலாய் ஏமார்ந்த காதலர்
கூந்தல் வனப்பு–இன் பெயல் தாழ வேந்தர்
களிறு எறி வாள்–அரவம் போல க் கண் வெளவி
ஒளிறுபு மின்னும் மழை

##14
செல்வம்–தரல்–வேண்டி ச் சென்ற நம்–காதலர்
வல்லே–வருதல் தெளிந்தாம் வயங்கிழாய்
முல்லை இலங்கு எயிறு ஈன நறுந்–தண்–கார்
மெல்ல–இனிய–நகும்

##15
திருந்திழாய் காதலர் தீர்குவர்–அல்லர்
குருந்து–இன் குவி–இணர்–உள்–உறை–ஆக த்
திருந்து இன்–இளி வண்டு பாட இரும்–தும்பி
இன்–குழல் ஊதும்–பொழுது



-------------------------------------
keyed-in and segmentd by v.s.r

##16
கருங்-குயில் கையற மா-மயில் ஆல
பெருங்-கலி-வானம் உரறும் பெருந்தோள்
செயலை-இளன்-தளிர்-அன்ன நின்-மேனி ப்
பயலை பழங்கண் கொள

##17
அறை-க்-கல் இறு வரை-மேல் பாம்பு சவட்டி
பறை-க்-குரல் ஏறு-ஒடு பெளவம் பருகி
உறைத்து இருள்-கூர்ந்தன்று வானம் பிறை-த்-தகை
கொண்டன்று பேதை நுதல்

##18
கல் பயில் கானம் கடந்தார் வர ஆங்கே
நல்-இசை-ஏறு-ஒடு வானம் நடு-நிற்ப
செல்வர்-மனம் போல் கவின் ஈன்ற நல்கூர்ந்தார்-
மேனி போல் புல்-என்ற காடு

##19
நாஞ்சில்-வலவன்-நிறம்-போல ப் பூஞ்-சினை ச்
செங்-கால்-மராஅம் தகைந்தன பைங்கோல்-
தொடி பொலி முன்-கையாள் தோள் துணை-ஆ-வேண்டி
நெடு-இடை ச் சென்றது என்-நெஞ்சு

##20
வீறு சால் வேந்தன் வினை-உம் முடிந்தன
ஆறு-உம் பதம்-இனிய ஆயின ஏறு-ஒடு
அரு-மணி நாகம் அனுங்க செரு-மன்னர்
சேனை போல் செல்லும் மழை


-------------------------------------
keyed-in and segmentd by v.s.r

##21
பொறி மாண் புனை திண்-தேர் போந்த-வழி-ஏ
சிறு-முல்லை-ப்-போது-எல்லாம் செவ்வி-நறு-நுதல்
செல்வ-மழை-த்-தடங்கண் சில்-மொழி பேதை-வாய்
முள்-எயிறு-ஏய்ப்ப வடிந்து

##22
இளையர்-உம் ஈர்ங்-கட்டு அயர உளை அணிந்து
புல் உண் கலிமா-உம்-பூட்டிய நல்லார்
இள-நலம் போல க் கவினி வளம்-உடையார்
ஆக்கம் போல் பூத்தன காடு

##23
கண் திரள் முத்தம் கடுப்ப ப் புறவு-எல்லாம்
தண்-துளி-ஆலி புரள புயல் கான்று
கொண்டு எழில்-வானம்-உம்-கொண்டன்று எவன்-
கொலோ
ஒண்டொடி ஊடும் நிலை

##24
எல்லா-வினை-உம் கிடப்ப எழு-நெஞ்சே
கல் ஓங்கு கானம் களிற்று-இன் மதம் நாறும்
பல்-இருங்-கூந்தல் பனி நோனாள் கார்-வானம்
எல்லியும் தோன்றும் பெயல்

##25
கருங்-கால்-வரகு-இன்-பொரி-ப்-போல் அரும்பு அவிழ்ந்து
ஈர்-ன்-தண்-புறவு-இல் தெறுழ் வீ மலர்ந்தன
சேர்ந்தன செய்-குறி வாரார்-அவர் என்று
கூர்ந்த பசலை அவள்-கு

##26
நலம் மிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலை-நாள் விளக்கு-இன் தகை-உடைய-ஆகி
புலம்-எலாம் பூத்தன தோன்றி சிலமொழி
தூது-ஒடு வந்த மழை

##27
முருகியம்-போல் வானம் முழங்கி இரங்க
குருகு-இலை பூத்தன கானம் பிரிவு எண்ணி
உள்ளாது-அகன்றார் என்று ஊடி யாம் பாராட்ட
பள்ளி-உள் பாயும் பசப்பு

##28
இமிழ்-இசை-வானம் முழங்க குமிழ்-இன்-பூ ப்
பொன்-செய்-குழை-இன் துணர் தூங்க தண்-பதம்
செவ்வி உடைய சுரம் நெஞ்சு-ஏ காதலி-ஊர்
கவ்வை அழுங்க ச் செலல்-கு

##29
பொங்கர்-உம் ஞாங்கர் மலர்ந்தன தங்கா-த்-
தகை-வண்டு பாண் முரலும் கானம் பகை கொண்டல்
எ-வ்வ்-எ-த்-திசை-கள்-உம் வந்தன்று சேறும்-நாம்
செவ்வி-உடைய-சுரம்

##30
வரை மல்க வானம் சிறப்ப உறை போழ்ந்து
இரு-நிலம் தீம்-பெயல் தாழ விரை நாற
ஊதை உளரும் நறுன்-தண்-கா பேதை
பெரு-மடம் நம்-மாட்டு உரைத்து


-------------------------------------
keyed-in and segmentd by v.s.r

##31
கார் ச் சேண் இகந்த கரை மருங்கு-இன் நீர் ச் சேர்ந்து
எருமை-எழில்-ஏறு எறி பவர் சூடி
செரு மிகு மள்ளர்-இன் செம்மாக்கும் செவ்வி
திருநுதல்-கு யாம் செய் குறி

##32
கடாஅவுக பாக தேர் கார் ஓட க் கண்டு-ஏ
கொடாஅ ப் புகழ் வேட்கை ச் செல்வர்-மனம் போல்
படாஅ மகிழ் வண்டு பாண் முரலும் கானம்
பிடாஅ ப் பெருந்தகை நற்கு

##33
கடல்-நீர் முகந்த கமஞ்-சூல்-எழிலி
குட-மலை-ஆகத்து கொள் அப்பு-இறைக்கும்-
இடம் என ஆங்கே குறி-செய்தேம் பேதை-
மடமொழி எவ்வம் கெட

##34
விரி திரை வெள்ளம் வெறுப்ப ப் பருகி
பெரு-விறல்-வானம் பெரு-வரை சேரும்
கரு அணி காலம் குறித்தார் திரு அணிந்த
ஒள்-நுதல்-மாதர்-திறத்து

##35
சென்ற நம்-காதலர் சேண்-இகந்தார் என்று எண்ணி
ஒன்றிய நோய்-ஒடு இடும்பை-பல-கூர
வென்றி-முரசு-இன் இரங்கி எழில்-வானம்
நின்றும்-இரங்கும் இவள்-கு


keyed-in and segmentd by v.s.r

##36
சிரல் வாய் வனப்பின ஆகி நிரல்—ஒப்ப
ஈர்ன்—தண்—தளவம் தகைந்தன சீர்—த்—தக்க
செல்வ—மழை—மதர்க்கண் சில்—மொழி—பேதை ஊர்
நல்—விருந்து—ஆக நமக்கு

##37
கருங்—கடல் மேய்ந்த கமஞ்—சூல்—எழிலி
இருங்—கல் இறு—வரை ஏறி உயிர்க்கும்
பெரும்—பத—க்—காலை—உம் வாரார்—கொல் வேந்தன்
அருந்—தொழில் வாய்த்த நமர்

##38
புகர்—முகம் பூழி ப் புரள உயர்—நிலைய
வெஞ்—சின—வேழம் பிடி—ஓடு இயைந்து ஆடும்
தண்—பத—க்—காலை—உம் வாரார் எவன்—கொலோ
ஒண்டொடி ஊடும் நிலை

##39
அலவன்—கண்—ஏய்ப்ப அரும்பு ஈன்று அவிழ்ந்த
கருங்—குரல்—நொச்சி ப் பசுந்—தழை சூடி
இரும்—புனம் ஏர்—க்—கடி—கொண்டார் பெருங்—கௌவை—
ஆகின்று நம்—ஊர் அவர்—க்கு

##40
வந்தன—செய்—குறி வாரார்—அவர் என்று
நொந்த ஒருத்தி—க்கு நோய் தீர் மருந்து—ஆகி
இந்தின்—கரு—வண்ணம் கொண்டன்று எழில்—வானம்
நந்தும் மென்—பேதை நுதல்



-------------------------------------
keyed-in and segmentd by v.s.r